பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
27 07 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான இலக்கை எட்டுவதில் மாநிலங்களின் பங்களிப்பு இன்றியமையாதது என்று பிரதமர் திரு நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
2. ஆசியான் நாடுகளின் ஒற்றுமைக்கும் உறுதிப்பாட்டுக்கும் இந்தியா எப்போதும் துணை நிற்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
3. பிரதமர் திரு நரேந்திரமோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி நாளை காலை 11 மணிக்கு அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பாகிறது.
4. மத்திய காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 30 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர்.
5. பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிசுடும் பிரிவில் இந்தியாவின் மனுபாக்கர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

**[]<<<>>>[]**

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க வேண்டும் என்ற லட்சியம் ஒவ்வொரு இந்தியனுக்கும் உள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நித்தி ஆயோக்கின் ஒன்பதாவது ஆட்சிமன்றக் கூட்டம் நித்தி ஆயோக்கின் தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி தலைமையில் நடைபெற்றது.

அப்போது உரையாற்றிய அவர், வளர்ச்சிக்கான இலக்கை எட்டுவதற்கு மாநிலங்களின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிவித்தார்.

நாடு தற்போது தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் பல்வேறு மாற்றங்களை சந்தித்து வருவதாகத் தெரிவித்த பிரதமர், புதிய வாய்ப்புகளை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கு முழுமூச்சுடன் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

சர்வதேச முதலீடுகளை ஈர்க்கும் வகையில் நாட்டின் வெளியுறவுக் கொள்கைகள் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டம், நாட்டை வளர்ச்சிப் பாதையில் பயணிக்க வைத்திருப்பதாகத் தெரிவித்த அவர், தற்போது வளர்ச்சிக்கான சரியான பாதையில் சென்று கொண்டிருப்பதாகக் கூறினார்.

நாட்டில் இளைஞர்களின் சக்தியையும், அவர்களின் செயல் திறனையும் ஒட்டுமொத்த உலகமும் உற்று நோக்கிக் கொண்டிருப்பதாகத் தெரிவித்த பிரதமர், இளைஞர்களை திறன்மிக்கவர்களாக உருவாக்க வேண்டும் என்பதே அரசின் இலக்காக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

திறன் மேம்பாடு, ஆராய்ச்சி, புதிய கண்டுபிடிப்புகள், தொழில் சார்ந்த நுண்ணறிவு ஆகியவை வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான கருவிகள் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற நித்தி ஆயோக் ஆட்சிமன்றக் கூட்டத்தில் மாநிலங்களின் முதலமைச்சர்கள், யூனியன் பிரதேசங்களின் துணைநிலை ஆளுநர்கள், நித்தி ஆயோக் துணைத்தலைவர் திரு **Suman Bery** மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**[]<<<>>>[]**

பிஜேபி ஆளும் மாநில முதலமைச்சர்களின் கூட்டம் புதுதில்லியில் உள்ள பிஜேபி தலைமையகத்தில் தற்போது நடைபெற்று வருகிறது.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, பிரதமர் திரு நரேந்திரமோடி, உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா, உத்திர பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் மற்றும் மூத்த தலைவர்கள் கூட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

மக்களவைத் தேர்தல் மற்றும் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டதற்குப் பிறகு இக்கூட்டம் நடைபெறுவதால் பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

அகில இந்திய வானொலியில் பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சி, நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

பிரதமரின் உரையை நாட்டில் உள்ள அனைத்து நிலையங்களும் ஒலிபரப்பு செய்யும்,

அகில இந்திய வானொலி, டி டி நியூஸ், பிரதமர் அலுவலகம், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் ஆகியவற்றின் யூ டியூப் சேனல்களிலும் இதனை கேட்கலாம்.

பிரதமர் உரையை தொடர்ந்து அதன் தமிழாக்கம் இடம்பெறும்.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பு செய்யப்படும்.

இதனை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்

**[]<<<>>>[]**

நீரிழிவு சிகிச்சையை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சிப் பணிகளை மருத்துவ நிபுணர்கள் முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திரசிங் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நீரிழிவு ஆராய்ச்சி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த சர்வதேச 'டயாபெட்டிஸ் அப்டேட்' மாநாட்டை தொடங்கி வைத்து பேசிய அவர், நீரிழிவு ஆராய்ச்சியில் இந்தியாவை உலக வரைபடத்தில் இடம்பெறச் செய்ய வேண்டும் என்று கூறினார்.

**[]<<<>>>[]**

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ பி ஜே அப்துல் கலாமின் ஒன்பதாவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி, ராமேஸ்வரம் அருகே பேக்கரும்பில் உள்ள டாக்டர் அப்துல் கலாம் நினைவிடத்தில் ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் திரு சிம்ரன்ஜித் சிங் காலோன் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும், பொதுமக்களும் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இந்நாளையொட்டி உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் எளிமை, கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றின் அடையாளமாக திகழ்ந்தவர் டாக்டர் அப்துல் கலாம் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

எளிமையான செயல்பாடுகள் மூலம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து மக்களாலும் விரும்பப்பட்ட தலைவராக வாழ்ந்தவர் டாக்டர் கலாம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

உலகின் அனைத்து நாடுகளுக்கும் பொதுவானவற்றை பாதுகாக்கவும், அனவைருக்கும் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கும் சர்வதேச அளவிலான ஒத்துழைப்பு வலுவாக இருக்க வேண்டுமென்று வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

லாவோஸின் **Vientiane-**வில் நடைபெற்ற 31-வது ஆசியான் மண்டல கூட்டமைப்பு நாடுகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் உலகமயமாக்கலின் பயன்கள் நாடுகளிடையே நேர்மையான முறையில் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும் என்று கூறினார்.

அரசியல், பொருளாதார, தொழில்நுட்ப ரீதியிலான அனைத்து பிரச்சினைகளுக்கும் ஒத்துழைப்பு மூலமாக உரிய தீர்வுகளை காண முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தையும், அதற்கான சதித் திட்டம் தீட்டும் அமைப்புகளையும் முற்றிலுமாக அழிக்க வேண்டும் என்ற கொள்கையில் அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதம் எந்த வடிவில் இருந்தாலும், அதனை சகித்துக் கொள்வதில்லை என்ற இந்தியாவின் உறுதிப்பாட்டை அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டுமென்றும் அவர் வலியுறுத்தினார்.

ஆசிய நாடுகளின் ஒற்றுமைக்கும், உறுதிப்பாட்டுக்கும் இந்திய எப்போதும் துணை நிற்பதாகக் கூறிய அவர், கிழக்கத்திய வெளியுறவுக் கொள்கையின் அடிப்படையில் செயல்பட உறுதிபூண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.,

கடல்சார் பாதுகாப்புக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும் திரு ஜெய்ங்கர் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

கர்நாடகாவின் காவிரி நீர்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் தொடர் கனமழை காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று மேலும் அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக அணையின் நீர்மட்டம் இன்று நூறு அடியை தாண்டியது. இன்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 101 புள்ளி ஏழு அடியாக உயர்ந்துள்ளது.

இந்நிலையில் கர்நாடக அணைகளிலிருந்து அதிக அளவில் தண்ணீர் திறந்துவிடப்படுவதால் ஒகேனக்கல் காவிரி ஆற்றின் இரு கரைகளையும் தொட்டவாறு வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது.

இன்று மாலை நிலவரப்படி ஒகேனக்கலுக்கு ஒரு லட்சத்து 30 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டிருப்பதாக எமது செய்தியாளர் தொவிக்கிறார்.

இதனிடையே மத்திய நீர்வளத்துறையின் தென்மண்டல ஆறுகள் பிரிவின் செயற்பொறியாளர் திரு எல் பன்னீர்செல்வம், கர்நாடக அணைகளிலிருந்து காவிரி ஆற்றில் கூடுதல் உபரிநீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மின்கட்டண உயர்வை மாநில அரசு திரும்பப்பெற வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் திரு ஜி கே வாசன் வலியுறுத்தியுள்ளார்.

கோயம்புத்தூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மின்கட்டண உயர்வால் மக்கள் பொருளாதார ரீதியாக மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதாகக் கூறினார்.

கீழ்பவானி பாசனப் பகுதியில் கால்வாய்களை சீரமைத்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

சிங்காநல்லூர் பேருந்து நிலையத்துக்கு பெருந்தலைவர் காமராஜர் பெயரை சூட்ட வேண்டுமென்று தமாகா வலியுறுத்துவதாகவும் அவர் கூறினார்.

நித்தி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதலமைச்சர் பங்கேற்காமல் இருந்ததற்கு அரசியல் காரணம் மட்டுமே என்றும் திரு ஜி கே வாசன் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநிலம் நவிமும்பையில் இரண்டு அடுக்கு மாடி கட்டிடம் இடிந்து விழுந்ததில் மூன்று பேர் உயிரிழந்தனர். இரண்டு பேர் காயமடைந்தனர்.

பேலாப்பூர் பகுதியில் நடந்த இந்த சம்பவம் குறித்து அறிந்ததும், மாநகராட்சி ஆணையர் திரு கைலாஷ் ஷிண்டே, சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தினார்.

தேசிய பேரிடர் மீட்புப் படையினர், காவல்துறையினர் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

13 குழந்தைகள் உட்பட 52 பேர் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டனர்.

கனமழை காரணமாக இந்த கட்டிடம் இடிந்து விழுந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

**[]<<<>>>[]**

மத்திய காஸா பகுதியில் இஸ்ரேல் நடத்திய விமான தாக்குதலில் 30 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இடம்பெயர்ந்த மற்றும் போரினால் காயமடைந்த பாலஸ்தீனர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த பள்ளிக் கூடத்தின் மீது குண்டு வெடித்ததில் இவர்கள் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே இந்த சம்பவம் குறித்து தெரிவித்துள்ள இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் படைப்பிரிவின் கமாண்டர்கள் மற்றும் அப்படையைச் சேர்ந்தவர்கள் இந்த பள்ளி வளாகத்தில் தங்கி இருந்ததை அடுத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த பள்ளியில் இஸ்ரேல் படைகள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தேவையான தளவாடங்கள் வைக்கப்பட்டிருந்ததாகவும் இஸ்ரேல் ராணுவம் குற்றம்சாட்டியுள்ளது.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் போட்டியின் துப்பாக்கிசுடும் பிரிவில் இந்தியாவின் மனுபாக்கர் இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளார்.

இன்று நடைபெற்ற பத்து மீட்டர் ஏர் பிஸ்டல் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர் மூன்றாவது இடத்தை பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

இப்போட்டியின் பத்து மீட்டர் ஏர் ரைபில் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் இளவேனில் வாளறிவன், சந்திப்சிங் இணை 12-வது இடத்தை பிடித்து தோல்வியடைந்தது.

ஆடவர் ஒற்றையர் துடுப்புப் படகு போட்டியில் இந்தியாவின் பல்ராஜ் பன்வார் நான்காவது இடத்தை பிடித்துள்ளார்.

***<u>End of News</u>***